sns academy

an International CBSE Finger Print School
Coimbatore

இலக்கணக்குறிப்பு தருக.

1. ஜெய்சசின், குப்பைகளை குப்பைத் தொட்டியில் போட வேண்டும்.
அ. விழைவுத் தொடர் (ஏவல்) ஆ. விழைவுத் தொடர் (வேண்டுதல்)

2. ஜெய்சூர்யா, குப்பைகளை குப்பைத் தொட்டியில் போடு.
அ. விழைவுத் தொடர் (ஏவல்) ஆ. விழைவுத் தொடர் (வேண்டுதல்)

3. தீண்டாமை ஒழிக.
அ. விழைவுத் தொடர் (வைதல்) ஆ. விழைவுத் தொடர் (வாழ்த்துதல்)

4. பவின் கரும்பலகையை அழி.
அ. விழைவுத் தொடர் (ஏவல்) ஆ. விழைவுத் தொடர் (வேண்டுதல்)

5. ஆஹா! சூர்யா எவ்வளவு அழகாக எழுதுகிறான்!
அ. உணர்ச்சித் தொடர் (உவகை) ஆ. உணர்ச்சித் தொடர் (வியப்பு)

6. தமிழ் வாழ்க.
அ. விழைவுத் தொடர் (வைதல்) ஆ. விழைவுத் தொடர் (வாழ்த்துதல்)

7. எரிக் வகுப்பறையை அழுக்காக்கி விட்டானே!
அ. உணர்ச்சித் தொடர் (அவலம்) ஆ. உணர்ச்சித் தொடர் (அச்சம்)

8. ஆஹா! கார்த்திக் எவ்வளவு அழகு!
அ. உணர்ச்சித் தொடர் (வியப்பு) ஆ.உணர்ச்சித் தொடர் (அவலம்)

9. அடடா! கிருத்திக் முதல் பரிசு பெற்றான்!
அ. உணர்ச்சித் தொடர் (உவகை) ஆ. உணர்ச்சித் தொடர் (வியப்பு)

10. ஐயோ! அஷ்வந்த் விழுந்து விட்டானே!
அ. உணர்ச்சித் தொடர் (அவலம்) ஆ. உணர்ச்சித் தொடர் (அச்சம்)

தொடர்களை மாற்றுக.

1) இளமையில் கல் (செய்தித் தொடராக்கு)

2) திருக்குறளை அனைவரும் அறிவர் (வினாத்தொடராக்கு)

3) கிளி கல்லால் அடிபட்டது. (உணர்ச்சித் தொடராக்கு)

4) அறம் செய்ய வேண்டும். (கட்டளைத் தொடராக்கு)

5) அனைவரும் தாய்மொழியைப் போற்றுக – இந்தக் கட்டளைச் சொற்றொடரைச் செய்திச் சொற்றொடராய் மாற்றுக.

6) குழந்தைக்கு என்ன தெரியும்? – இவ்வினாச் சொற்றொடரைச் செய்திச் சொற்றொடராய் மாற்றுக.

7) கட்டளைச் சொற்றொடராய் மாற்றுக – ஒவ்வொரு நாளும் செய்தித்தாளைப் படிக்க வேண்டும்

8) ஆ! வானத்து விண்மீன்கள் என்னே அழகு! இந்த உணர்ச்சிச் சொற்றொடரைச் செய்திச் சொற்றொடராயும் வினாச் சொற்றொடராயும் மாற்றுக.

9) மாணவர்கள் சிறந்த முறையில் தேர்வு எழுதினர். வினாச் சொற்றொடராய் மாற்றுக.